**தலைப்பு 257 - களுத்துறை மாவட்ட செயலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

களுத்துறை மாவட்ட செயலகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் களுத்துறை மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2023 மே 24 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 மே 25 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான களுத்துறை மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் பேரில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- கணக்காய்விற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் தெரிவிக்கப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட நிதி செயலாற்றுகை கூற்றின் பிரகாரம் திறைசேரி கட்டுநிதி பெறுவனவாக ரூபா 5,233,258,423 காட்டப்பட்டிருந்த போதும் நிதிக்கூற்றுடன் சமர்பித்திருந்த 2022 ஆண்டிற்கான கட்டுநிதி கணக்கு மீதான கூற்றின் பிரகாரம் திறைசேரி கட்டுநிதி பெறுவனவுக் கூட்டுத் தொகை ரூபா 4,920,762,000 ஆனதில் அப்பெறுதிகளிற்கிடையில் ரூபா 312,496,423 ஆன இணக்கமின்மை அதவானிக்கப்பட்டது. | நிதிக்கூற்றுக்களில் ஏசீஏ – 3 பிரகாரம் குறிப்பிடப்படும் திறைசேரி கட்டுநிதி பெறுவனவுப் பெறுமதி சரியானதெனவும், அப் பெறுமதி திறைசேரியினால் அனுப்பப்பட்ட நிதியுடன் இணக்கஞ் செய்கையில் 2022 திசெம்பர் 31 திகதிய இறுதியாண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்றின் மீதியில் தாக்கமொன்று ஏற்படவில்லையென. | இணங்காமைக்காக இணக்கக் கூற்றொன்றை தயாரித்து சமர்ப்பிக்க வேண்டியதுடன் இணக்கமின்மையை சீராக்க மற்றும் எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகளை தவிர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.2 நிதி நிலைமை மீதான கூற்று

**நிதியல்லாத சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகன்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 திகதி சமர்பித்திருந்த கடந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்படும் 08 நிதியல்லா சொத்துக்களின் இறுதி மீதிகள், 2022 திசெம்பர் 31 | 2022 ஆண்டின் திறைசேரி அச்சு வெளியீட்டில் இரண்டு பிரதேச செயலகங்களின் ஆரம்ப மீதிகளில் காட்டப்பட்டது தவறான | இணங்காமைக் காக இணக்கக் கூற்றொன்றை தயாரித்து சமர்பிக்க |

| | | | |
|---|---|---|---|
| | சமர்பித்திருந்த மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் நிதயல்லா சொத்துக்கள் தொடர்பான கூற்றின் பிரகாரம் (ACA-6/SA 82) அதன் சொத்துக்களின் ஆரம்ப மீதிகளின் கூட்டுத் தொகையுடன் இணைக்கஞ் செய்யும் போது ரூபா 310,597,605 பெறுமதியான இணைக்கமின்மை அவதானிக்க்பட்டது. | பெறுமதிகளாகும். WEB UPLOAD ஆகும் போது ஏற்பட்ட தொழிநுட்ப தவறு காரணமாக அத்தவறான பெறுமதி காட்டப்பட்டிருந்தது. 2022 ஆண்டில் அத்தவறான பெறுமதிகளை சீராக்க திறைசேரியினால் நடவடிக்கை எடுத்ததால் 2022 திசெம்பர் 31 திகதி SA 82 அறிக்கையில் காட்டப்படும் இறுதி மீதி சரியான பெறுமதியாகுமென. | வேண்டியதுடன் இணக்கமின்மையை சீராக்க மற்றும் எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகளை தவிர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 திகதி (CIGAS) நிகழச்சித் திட்ட பிரகாரமான நிதியல்லாத சொத்துக்கள் அசையும் அறிக்கை பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் மாவட்ட செயலகம் மற்றும் 14 பிரதேச செயலகங்களின் நடைமுறை வேலைகளின் பெறுமதி ரூபா 388,756,237 ஆன போதும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கும் நிதியல்லா சொத்துக்கள் கூற்றின் (ACA – 6 கூற்று) பிரகாரம் அத்திகதியில் நடைமுறை வேலைகளின் பெறுமதி ரூபா 275,762,780 ஆனதில் அம்மீதிகளிற்கு இடையில் ரூபா 112,993,457 ஆன பெறுமதியுடனான இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது. | 14 பிரதேச செயலகங்களின் மற்றும் மாவட்ட செயலகத்தின் தரவுகள் உள்ளடங்கிய ஒன்றிணைந்த கணக்கு பொழிப்பில் உருவாகும் அறிக்கையில் நிலையான சொத்து பெறுமதி சரியாக குறிப்பிடப்படுவதில்லை என ஏற்றுக் கொள்கிறேன். இது தொடர்பாக அரச கணக்குகள் திணைக்களமும் அறிவூட்டப்பட்டது. நடைமுறை வேலைகளின் (WIP) பெறுமதியும் இதன் காரணமாக வித்தியாசத்தை காட்டுவதாக ஏற்றுக் கொள்கிறேன். | இணங்காமைக்காக இணக்கக் கூற்றொன்றை தயாரித்து சமர்விக்க வேண்டியதுடன் இணக்கமின்மையை சீராக்க மற்றும் எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகளை தவிர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மாவட்ட செயலகத்தினால் சமர்பித்த நிதியல்லா சொத்து அட்டவணை பிரகாரம் ஆண்டினுள் கொள்வனவு செய்த மற்றும் பராதீனம் செய்யப்பட்ட நிதியல்லா சொத்துக்களின் கூட்டுத் தொகை முறையே ரூபா 50,848,337 மற்றும் 6,275,253 ஆன போதும் மீளாய்வாண்டில் நிதியல்லா சொத்து அறிக்கையில் கொள்வனவு மற்றும் அகற்றுதலின் கீழ் அப்பெறுமதி உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | திறைசேரியினால் மேலே (அ) இன் இவ்வித்தியாசத்தை சீராக்க நடவடிக்கை எடுத்ததால் ஆண்டினுள் கொள்வனவு மற்றும் பராதீனத்தை உள்ளடக்காது வித்தியாசத்திற்காக செம்மையாக்கம் செய்து இறுதி மீதி சீராக்கப்பட்டுள்ளதாக. | இந்த செம்மையாக்கலை நிதியல்லா சொத்து அறிக்கையில் கொள்வனவு மற்றும் அகற்றலின் கீழ் உள்ளடக்க வேண்டும். |
| (ஈ) | 2022 சனவரி 01 திகதி திறைசேரி அட்டவணை SA 82 பிரகாரம் நிதியல்லா சொத்தறிக்கையில் ரூபா 53,190,718 ஆன ஆரம்ப மீதிக்கான செம்மையாக்கங்களிற்குரிய அங்கீகாரம் மற்றும் அதற்குரிய ஜர்னல் குறிப்பு மற்றும் அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை. | சொத்துக்களிற்கான செம்மையாக்கம் மேற்கொள்வது குறித்த பிரதேச செயலகத்தினால் என, அச் செம்மையாக்கல்களிற்கான அங்கீகாரம் மற்றும் அட்டவணைகள் அந்த பிரதேச செயலகத்தில் உள்ளதுடன் அவற்றை இதன் பிறகு பிரதான அலுவலகத்திற்கும் பெற்று | ஆரம்ப மீதிக்கான செம்மையாக்கல்களிற்குரிய அங்கீகாரம், ஜர்னல் குறிப்பு மற்றும் அட்டவணை கணக்காய்விற்கு |

| | | | |
|---|---|---|---|
| | | கோவைப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக. | சமர்பிக்கப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டு நிதிக்கூற்றுக்களில் நிதியல்லா சொத்து அறிக்கையில் நடைமுறை வேலையாக காட்டியுள்ள ரூபா 153,768,738 ஆன பெறுமதியுடன் கூடிய புதிய அலுவலக கட்டிட அலுவலக நடவடிக்கைகளுக்காக 2020 முதல் 2022 வரையான ஆண்டுகளிலிருந்தே பயன்படுத்தப்பட்ட போதும் 2022 திசெம்பர் 31 திகதியன்றும் நடைமுறை வேலையின் கீழ் தொடர்ந்தும் காட்டப்பட்டிருந்தது. | இங்கு குறிப்பிட்டுள்ள அலுவலக கட்டிடத்தின் வேலைகள் தற்போது பூர்த்தியாகியுள்ள கட்டிடமாகையால் அக்கட்டிட பெறுமதியை மாவட்ட செயலகத்தின் கீழ் உள்ளடக்கி பிரதேச செயலகத்திற்கு மாற்ற நடவடிக்கை எடுப்பதாக. | வேலைகள் பூர்த்தியாகியுள்ள கட்டிடங்களை மேலும் நடைமுறை வேலைகளின் கீழ் காட்டாது கட்டிடங்களின் கீழ் மூலதனமாக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 பிரதான கண்கீட்டு உத்தியோகத்தர்/ கண்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ள வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தல் மேற்கொள்ள வேண்டிய போதிலும், அதன் பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்பட்டிருருக்கவில்லை.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மாவட்ட செயலகத்தில் நிதி கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளக கட்டுப்பாட்டு தொகுதியொன்றை தயாரித்து நடாத்திச் செல்லப்படுவதாக பிரதான கண்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கண்கீட்டு உத்தியோகத்தர் உறுதி செய்ய வேண்டியதுடன் அத் தொகுதியின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து அதன் பிரகாரம் தொகுதியை ஆக்கபூர்வமாக செயற்படுத்திச் செல்ல தேவையான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டுமெனவும், இந்த மீளாய்வை ஆவணரீதியாக மேற்கொண்டு அதன் பிரதியொன்றை கணக்காய்வாளர் நாயகத்திற்கு அனுப்ப வேண்டியிருந்த போதும், அவ்வாறான மீளாய்வொன்றை மேற்கொண்டதற்கான கூற்றொன்று கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை. | மாவட்ட செயலகத்தினுள் நிதிக் கட்டுப்பாடு மற்றும் ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு தொகுதியொன்றை பேணிச் செல்ல உள்ளக கட்டுபாட்டு முறைமையொன்றை நடைமுறைப்படுத்துவதுடன் அவ்வப் போது மேலும் முன்னேற்ற வேண்டிய தொகுதிகளை இனங்கண்டு அதற்காக உள்ளக கட்டுப்பாட்டு முறையை புதிதாக அறிமுகப்படுத்தி சந்தர்ப்பத்திற்கு ஏற்ப மேற்கொள்ளப்படுவதாக, எதிர்காலத்தில் மேலும் முன்னேற்ற வேண்டிய தொகுதிகளை இனங்கண்டு அதற்காக உள்ளக கட்டுப்பாட்டு முறையை புதிதாக | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

அறிமுகப்படுத்த குறித்துக் கொண்டதாக.

### 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

மாதிரி கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு பகுப்பாயப்படுகிறது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 396 (ஈ) | 2022 திசெம்பர் 31 திகதி 05 வங்கிக் கணக்குகளிலிருந்து விநியோகித்திருந்த பெறுமதி ரூபா 1,786,752 ஆன காலாவதியான 01 மாதத்திற்கும் 14 மாதங்களிற்கும் இடையிலான கால வீச்சளவிலான 17 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 06 மாதங்கள் கடக்க முன்னர் காசோலையை தீர்த்துக் கொள்ளுமாறு குறித்த நிறுவனம் அறிவூட்டப்பட்டதாக. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2019 மே 31 திகதிய இலக்கம் 14/2019 பொது நிர்வாக சுற்றறிக்கை | பானதுறை மற்றும் ஹொரன 02 பிரதேச செயலகங்களில் 117 ஓய்வூதிய கோவைகள் 2022 திசெம்பர் 31 திகதியளவிலும் சுற்றறிக்கை பிரகாரம் திருத்தப்பட்டு இருக்கவில்லை. | பதில் சமர்பிக்கப்படவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மற்றும் அவ்வாறு செய்யாத அலுவலர்கள் தொடர்பில் உரியவாறு ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல். |
| (இ) | 2019 மே 31 திகதிய இலக்கம் 02/2019 பொது நிர்வாக சுற்றறிக்கை கடிதம், 06 பந்தி | மரணித்த ஓய்வூதியதாரர்களின் தகவல்களை உரிய நேரத்தில் பெற்று ஓய்வூதியதாரர்களின் பெயர் பட்டியலை காலத்திற்கு காலம் நாளாதுரையாக்காததன் மீது பானதுறை, பேருவளை, ஹொரன மற்றும் இங்கிரிய பிரதேச செயலகங்களில் 2022 திசெம்பர் 31 திகதிக்கு மரணித்த ஓய்வூதியதாரர்களுக்கு முறையீனமாக கூடுதலாக கொடுப்பனவு செய்து மேலும் அறவிட வேண்டியதாக ரூபா 5,179,949 தொகை நிலவியது. | இது தொடர்பாக இறப்பு சான்றிதழ் விநியோகிக்கும் பதிவாளர்களின் விஷேட கவனத்தை செலுத்த எதிர்பார்ப்பதாக. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மற்றும் அவ்வாறு செய்யாத அலுவலர்கள் தொடர்பில் உரியவாறு ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல். |
| (ஈ) | 1996 இன் 22 இலக்க சட்டத்தின் மூலம் திருத்திய 1916 இன் 33 இலக்க (182 அதிகாரமான) | | | |

| | | | |
|---|---|---|---|
| துப்பாக்கி கட்டளை சட்டம் மற்றும் 2020 ஆகஸ்ட் 26 திகதிய இலக்கம் 06/2020 கொண்ட பாதுகாப்பு அமைச்சு சுற்றறிக்கை | | | |
| (i) 5(1), 22(1), 22(2)(எ), 23(1) மற்றும் 23(3) பிரிவு மற்றும் சுற்றறிக்கையின் 3.4 பிரிவு | அனுமதிப்பத்திரத்தை புதுப்பிக்காது மற்றும் அத்துப்பாக்கிகளை தற்காலிகமாக ஒப்படைக்காது ஹொரன மற்றும் பானதுறை பிரதேச செயலகங்களில் முறையே 15 மற்றும் 22 துப்பாக்கிகளை நபர்களினால் தம்முடன் வைத்துக் கொண்டுள்ளதாகவும் அவற்றிற்கிடையில் ஹொரன பிரதேச செயலகத்தில் 12 துப்பாக்கிகள் 10 ஆண்டுகள் முதல் 20 ஆண்டுகள் வரை காலமாகவும் பானதுறை பிரதேச செயலகத்தில் 20 துப்பாக்கிகள் 06 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகள் வரை காலமாகவும் அனுமதிப்பத்திரங்களை புதுப்பித்தமைக்கான சான்றுகள் சமர்பிக்கப்படவில்லை. | குறிப்பிட்டுள்ள துப்பாக்கிகள் தொடர்பாக பொலிஸ் அத்தியட்சகர் பானதுறை மற்றும் ஹொரன, இடமிருந்தும், பிரதேச செயலகங்களில் இருந்தும் அறிக்கை கோரியுள்ளதாக மற்றும் அதன் பிரகாரம் கிடைத்துள்ள அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு அது தொடர்பாக செயற்படுவதாக. | சட்டம் மற்றும் சுற்றறிக்கை எற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மற்றும் அவ்வாறு செய்யாத அலுவலர்கள் தொடர்பில் உரியவாறு ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல். |
| (ii) சுற்றறிக்கையின் 3.6 பிரிவு | துப்பாக்கி அனுமதிப் பத்திரத்தை புதுப்பிக்கும் போது துப்பாக்கியின் தேவைப்பாடு தொடர்ந்தும் நிலவுவதாக உறுதி செய்து கொள்ள குறித்த பயிர் நிலம், கால்நடை பண்ணைகளின் நிலைத்திருத்தல் தொடர்பான புத்தகப் பக்கம் அல்லது உறுதிப்படுத்திய உறுதியின் பிரதியை பெற்றுக் கொள்ள வேண்டிய போதும் மாதிரி பரிசோதனைக்குட்பட்ட ஹொரன, பானதுறை மற்றும் இங்கிரிய பிரதேச செயலகங்களில் அவ்வாறு செய்திருக்கவில்லை. | பதில் சமர்பிக்கப்படவில் லை. | சட்டம் மற்றும் சுற்றறிக்கை எற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மற்றும் அவ்வாறு செய்யாத அலுவலர்கள் தொடர்பில் உரியவாறு ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல். |
| (iii) சுற்றறிக்கையின் 4.1 பிரிவு | வயது 65 - 70 இற்கடையிலான நபர்களிற்கு துப்பாகியொன்றை பயன்படுத்தும் பொறுத்தமான உடல் மற்றும் மனோ நிலையில் உள்ளதனை அரச ஏற்றுக் கொண்ட | இங்கிரிய பிரதேச செயலகத்தற்கு உரிய வயது 65 -70 இற்கிடையிலான | சட்டம் மற்றும் சுற்றறிக்கை எற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மற்றும் |

| | | |
|---|---|---|
| வைத்தியரிடம் பெற்ற மருத்துவ சான்றிதழின்றி மாதிரி பரிசோதனைக்குட்பட்ட, பானதுறை மற்றும் இங்கிரிய பி,செ இனால் 2023 ஆண்டில் 09 பேர்களுக்கு துப்பாக்கி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள பரிந்துரை வழங்கப்பட்டிருந்தது. | அனுமதிப்பத்திர உரிமையாளர்க்ள் முறையான மருத்துவ சான்றிதழை சமர்பித்துள்ளதாக . | அவ்வாறு செய்யாத அலுவலர்கள் தொடர்பில் உரியவாறு ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல். |

**2.3 வைப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில், 6 பொது வைப்புக் கணக்குகளின் கூட்டுத் தொகை ரூபா 345,324,668 ஆன மீதி நிலவியதுடன் அம்மீதியினுள் 5 பொது வைப்புக் கணக்களிற்குரிய கூட்டுத் தொகை ரூபா 96,328,508 ஆன இரண்டாண்டுகளை விஞ்சியிருந்த தீர்க்கப்படாத வைப்பு மீதிகள் மற்றும் கூட்டுத் தொகை ரூபா 18,141,909 ஆன 5 ஆண்டுகளை விஞ்சிய மீதியும் காணப்பட்டது. இது தொடர்பாக நிதிப்பிரமாணம் 571(3) ஏற்பாடுகள் பிரகாரம் காணப்படும் குறைபாடுகள் மற்றும் தவறுகளை சீராக்கி குறித்த தரப்பினரிற்கு வைப்புத் தொகையை செலுத்துவதற்கு அல்லது அரச வருமானத்திற்கு செலவு வைக்க ஒழுங்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 05 ஆண்டுகளை விஞ்சிய பொது வைப்பு தொடர்பாக கணக்காய்வுக் குழுக்களில் தொடர்ந்தும் கலந்துரையாடுவதுடன் அதனூடாக பிரச்சினைக்குரிய வைப்புக்களிற்கு தீர்வை பெற்றுக் கொள்வதனூடாக வைப்பு மீதிகளை தீர்த்துள்ளதாக மற்றும் பிரதேச செயலாளர்களை இது தொடர்பாக அறிவூட்டியதாக. | காலாவதியான வைப்பு மீதிகளை விரைவில் தீர்க்க அல்லது நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல. |

**2.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சனாதிபதி அலுவலக செலவின தலைப்பின் கீழ் ஏற்பாடு ஒதுக்கி 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் செயற்படுத்தி இருந்த வருமை ஒழிக்கும் நோக்கத்தை முன்கொண்ட கிரரம சக்தி மக்கள் நிகழ்ச்சித் திட்டதின் கீழ் 140 சங்கங்களை பதிவு செய்திருந்ததுடன் 2022 திசெம்பர் 31 திகதியன்று அவற்றில் 103 சங்கங்கள் அதாவது, சங்கங்களில் 74 சதவீதம் செயலற்று காணப்பட்டதுடன், அச் சங்கங்களின் வங்கிக் கணக்குகளில் அத்திகதியில் நிலவிய ரூபா 55,754,971 தொகை குறித்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு பயன்படுத்தாது விளைவற்று காணப்பட்டது. | கிராம சக்தி பணியகம் 2019 ஆண்டு முதல் சமுர்த்தி அபிவிருத்தி அமைச்சிற்கு இணைக்கப்பட்டதுடன் 2020, 2021 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளில் கிராம சக்தி நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்தும் முறை தொடர்பாக சரியான ஆலோசனை கிடைக்கவில்லையென. | சரியான ஆலோசனைகளை பொறுப்புவாய்ந்த தரப்பினரிடமிருந்து பெற்றுக் கொண்டு நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | களுத்துறை மாவட்டத்திலான அநேகமான பிரதேச செலகங்களில் அங்கீகார ஆளணியை விஞ்சி அபிவிருத்தி அலுவலர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் மாதிரி பரிசோதனைக்குட்படுத்திய ஐந்து (05) பிரதேச செயலகங்களில் அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட ஆளணியை விஞ்சி கடமையில் ஈடுபடுத்தி இருந்த மேலதிக அபிவிருத்தி அலுவலர்கள் என்பது (80) பேர்களிற்காக 2022 சனவரி முதல் 2023 சனவரி வரையான காலஎல்லைக்காக மாத்திரம் சம்பளமாக ரூபா 50,745,984 செலுத்தப்பட்டிருந்தது. | அரச கொள்கையின் மீது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் அவ் அலுவலர்களை ஆட்சேர்த்து இணைத்துள்ளதாக. | அங்கீகார ஆளணியினுள் பதவிகளை பேணிச் செல்ல வேண்டியதுடன் இல்லையெனில் அங்கீகார ஆளணியை திருத்திக் கொள்ள வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக மாவட்ட செயலகத்தினால் செயல் நடவடிக்கை திட்டமொன்றை தயாரித்திருந்த போதும் 2014 பெப்ரவரி 17 திகதிய இலக்கம் 1/2014 கொண்ட சுற்றறிக்கை மற்றும் 2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 02/2020 கொண்ட பொது நிதி சுற்றறிக்கையின் 03 பந்தி பிரகாரம் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தை தயாரிக்கும் போது உள்ளடங்க வேண்டிய விரிவான தகவல்கள் உள்ளடக்கப்படவில்லையென அவதானிக்கப்பட்டது. | செயல் நடவடிக்கை திட்டத்தை 2014 பெப்ரவரி 17 திகதிய இலக்கம் 1/2014 கொண்ட பொது நிதி சுற்றறிக்கை பிரகாரம் தயாரிக்குமாறு குறித்த அலுவலர்கள் அறிவூட்டப்பட்டதாக. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும. |

### 3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| களுத்துறை பிரதேச செயலகத்திற்காக புதிய கட்டிடமொன்றை நிர்மாணித்தல் 2017 பெப்ரவரி 13 திகதி ஆரம்பித்த போதும் ஒப்பந்ததாரர் நிர்மாணப் பணிகளை இடைநடுவே நிறுத்தியதால் 2018 ஆகஸ்ட் மாதம் நிர்மாணப் பணிகள் முழுமையாக நின்றிருந்தது. மீண்டும் 2020 ஆண்டில் | வங்கி பிணைமுறியின் செல்லுபடியாகும் காலதிதை 2023 ஜுன் மாதம் வரை நீடிக்க கோரியுள்ளதுடன் இறுதி பட்டியலை இன்னும் பரீட்சித்துக் | அரசிற்கு அறவிட வேண்டிய முறபணத்தை மற்றும் வேலைத்தளத்தில் இருந்த நிர்மாண பொருட்களிற்காக |

கட்டிடத்தின் எஞ்சிய பணிகள் புதிய ஒப்பந்தமொன்றாக ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2022 பெப்ரவரி மாதம் பூர்த்தி செய்யப்படவிருந்தது. பல காரணங்களினால் நிர்மாண காலத்தை 2022 ஜுலை 15 திகதி வரை காலநீடிப்பு செய்திருந்த போதும் 2021 ஆண்டு முதல் மீண்டும் இங்கு நிர்மாணத்தை நிறுத்தி இருந்த காரணத்தால் இவ்வறிக்கையை வெளியிடும் திகதி வரையும் கட்டிடம் மழைக்குள்ளாகி கட்டிடத்தின் எதிர்கால நிலைத்திருக்கும் தன்மைக்கு பாதிக்கும் நிலையில் காணப்பட்டதுடன் நிர்மாணப் பணிகளை ஆரம்பித்து 06 ஆண்டுகள் கடந்திருந்த போதும் எதிர்பார்த்த நோக்கத்திற்கு பயன்படுத்த முடியாததன் மீது பிரதேச செயலகத்திற்கு பலதரப்பட்ட சேவைகளை பெற்றுக் கொள்ள வருகை தரும் பொது மக்களை போன்றே ஆளணியும் அதிக கஷ்டத்திற்கு உள்ளாகி இருந்தனர். இரண்டாம் கட்டத்திற்காக ஒப்பந்ததாரருக்கு ரூபா 39,569,971 செலுத்தியிருந்ததுடன் செலுத்தப்பட்ட பட்டியல் மற்றும் இதுவரை பூர்த்தி செய்த வேலைப் பெறுமதிக்கிடையில் வித்தியாசமொன்று இருக்க முடியுமாகையால் மற்றும் வேலைத்தளத்தில் எஞ்சியிருந்த நிர்மாண பொருட்களிற்காக கொடுப்பனவு செய்துள்ள போதும் அப் பொருட்கள் ஒப்பந்ததாரர்களால் வேலைத்தளத்தில் இருந்து அகற்றப்பட்டுள்ளதால் அவை அனைத்தையும் ஒப்பந்ததாரரிடமிருந்து அறவிட வேண்டிய போதும் அரசிற்கு அறவிட வேண்டிய முற்பணம் மற்றும் வேலைத்தளத்தில் எஞ்சியிருந்த நிர்மாணப் பொருட்களுக்காக செலுத்த வேண்டிய தொகையை செலுத்த ஒப்பந்ததாரர் 2023 பெப்ரவரி 22 திகதி நடந்த கலந்துரையாடலில் இணங்கியிருந்த போதும் இறுதிப் பட்டியல் 2023 ஏப்ரல் 26 கணக்காய்வு திகதி வரையும் சமர்பிக்கப்படாததால் அரசிற்கு அறவிட வேண்டிய தொகை கணக்கிடப்பட்டு இருக்கவில்லை. ஒப்பந்ததாரரினால் சமர்பிக்கப்பட்ட பெறுமதி ரூபா 19,739,864 ஆன வங்கி பிணைமுறியின் செல்லுபடியாகும் காலம் 2022 திசெம்பர் 31 திகதி காலாவதியாக முன்னர் கூடுதல் கொடுப்பனவை அறவிட மாவட்ட செயலகத்தால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

கொண்டிருப்பதால் அரசிற்கு ஏதேனும் நட்டம் ஏற்பட்டிருப்பின் அதனை செயலாற்றுகை பிணைமுறியிலிருந்து அறவிட நடவடிக்கை எடுப்பதாக மற்றும் கட்டிடங்கள் திணைக்களத்தினால் எஞ்சிய வேலைகளிற்கு புதிய மதிப்பீடொன்றை தயாரித்துக் கொண்டிருப்பதாக.

அரசிற்கு அறவிட வேண்டிய தொகையை ஒப்பந்ததாரரிடம் இருந்து அறவிட வேண்டியதுடன் அரசிற்கு ஏதேனும் நட்டம் ஏற்பட்டிருப்பின் செயலாற்றுகை பிணைமுறியூடாக அறவிட வேண்டும். எஞ்சிய வேலைகளை புதிய மதிப்பீட்டின் மூலமேனும் விரைவில் மேற்கொள்ள வேண்டும்.

**3.3 உள்நாட்டு நிதியத்தை ஈடுபடுத்திய செயற்திட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகன்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வளள்லாவிட்ட பிரதேச செயலகத்திற்கு புதிய கட்டிடமொன்றை நிர்மாணித்ததில் எஞ்சிய வேலைகளின் பெறுமதி ரூபா 51,000,000 மொத்த கிரய மதிப்பீட்டொன்றின் கீழ் மேற்கொள்ளப்பட்டு இருந்ததுடன் அங்கு மேலதிக வேலைகளிற்காக ஒப்பந்ததாரர் கோரிய விலையை விட கூடுதலாக செலுத்துதல், குறித்த கட்டிட கட்டண அட்டவணையில் குறிப்பிடப்படும் விலையை விட கூடுதல் கொடுப்பனவு மற்றும் பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட அளவுகளை விட கூடுதலாக செலுத்தியிருந்தமை போன்ற விடயங்களினால் ரூபா 921,457 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.<br><br>கைத்தொழிலின் வேலைகளை பூர்த்தி செய்வதுடன் தொடர்பாக வேலைகள் பூர்த்தி செய்ததற்கான அறிக்கையொன்று, மாற்றுவதுடன் தொடர்பான ஒப்பந்ததாரரினால் வழங்கப்படும் திட்டம், வேலை பூர்த்தி செய்த பின்னர் வழங்கும் திட்டம், மின் உதிரிப்பாகங்கள் தொடர்பாக பட்டய மின்பொறியியல் அறிக்கையொன்று வொரன்டி மற்றும் கெரண்டி சான்றிதழ் மற்றும் ஒப்பந்ததாரரின் உத்தரவாத சான்றிதழ் ஆகிய எதுவும் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை.<br><br>அவ்வாறே நிர்மாணத்தின் போது மதிப்பீட்டில் குறிப்பிடப்படும் 65 வேலை விடயங்கள் கைவிடப்பட்டிருந்ததுடன், அந்த கைவிடப்பட்ட விடயங்களின் மொத்த பெறுமதி ரூபா 10,893,740 ஆனது. இந்த கைவிடப்பட்ட வேலைகள், மாற்றுதல் மற்றும் மேலதிக வேலைகளிற்காக 2006 பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.13.4 பிரகாரம் அறிக்கையை தயாரித்து அங்கீகாரத்தை பெற்றிருக்காததுடன் ஒரு நாளைக்கு தாமதக் கட்டணம் ரூபா 6,278 குறைத்துக் காட்டி ஒப்பந்த பிரகாரம் அறவிட வேண்டிய ரூபா 3,295,654 ஆன தாமத தண்டப் பணத்தை அறவிட்டிருக்கவில்லை. மாதாந்த முன்னேற்ற அறிக்கை இல்லாதமை மற்றும் வேலை திட்டமொன்று இல்லாதிருந்தமை காரணமாக தாமதம் சரியானதா மற்றும் நியாயமானதா என தீர்மானிக்க முடியாததால் விலை முரன்பாட்டிற்காக செலுத்தியிருந்த ரூபா 1,027,556 தொகை சரியானதா என கணக்காய்விற்கு உறுதியாகவில்லை. | வேலை பூர்த்தி செய்த பின்னர் வழங்கும் திட்டத்தை முன்வைக்குமாறு ஒப்பந்ததாரரை அறிவூட்டியுள்ளதுடன், நாட்டில் நிலவிய கொவிட் தொற்று நிலைமை காரணமாக ஏற்பட்ட நிர்மாண மூலப்பொருள் மற்றும் ஊழியர் பற்றாக்குறை போன்று நிர்மாண மூலப்பொருட்கள் துரிதமாக அதிகரித்தமை போன்றவற்றினால் பல சந்தர்ப்பங்களில் இந்த நிர்மாண உருப்படிகளிற்காக நியாயமான விலை அதிகரிப்பிற்காக ஒப்பந்ததாரர் கோரிய போதும் அதனை வழங்கவில்லை எனவும், அதன் பிரகாரம் தாமதக் கட்டணம் அறவிடப்படவில்லை எனவும் மற்றும் அளக்கும் போது ஏற்படட தவறினால் மேடையில் 46.23 அடி பரப்பளவிற்காக ரூபா 85,525.50 கூடுதலாக செலுத்தியிருந்ததுடன் அதனை ஒப்பந்ததாரரின் நிறுத்தற் பணத்திலிருந்து கழித்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக. | இவ் ஒப்பந்தத்தை மேற்கொள்வது தொடர்பாக சுயாதீன விசாரணை ஒன்றை நடாத்தி கூடுதல் கொடுப்பனவை ஒப்பந்ததாரரிடம் இருந்து அறவிட வேண்டியதுடன் கைவிடப்பட்ட வேலைகள், மாற்றியவைகள் மற்றும் மேலதிக வேலைகளற்காக பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் அறிக்கை தயாரித்து அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மதுராவள பிரதேச செயலகத்திற்கு புதிய கட்டிடமொன்றை நிர்மாணித்தல் - எஞ்சிய வேலைகள் ரூபா 53,000,000 ஆன மொத்த கிரய மதிப்பீட்டொன்றின் கீழ் மேற்கொள்ளப்பட்டு இருந்ததுடன் அங்கு அனைத்து கைவிடப்பட்ட வேலைகள், மாற்றுதல்கள் மற்றும் மேலதிக வேலைகளிற்காக குறித்த பிரதேச செயலாளர்களின் எழுத்துமூல கோரிக்கை, பொறுப்புவாய்ந்த அலுவலர்களின் பரிந்துரை காணப்படவில்லை.<br><br>வேலைகளை பூர்த்தி செய்வதுடன் தொடர்பாக வேலைகள் பூர்த்தி செய்ததற்கான அறிக்கையொன்று, மாற்றுவதுடன் தொடர்பான ஒப்பந்ததாரரினால் வழங்கப்படும் திட்டம், வேலை பூர்த்தி செய்த பின்னர் வழங்கும் திட்டம், மின் உதிரிப்பாகங்கள் தொடர்பாக பட்டய மின்பொறியியல் அறிக்கையொன்று வொரன்டி மற்றும் கெரண்டி சான்றிதழ் மற்றும் ஒப்பந்ததாரரின் உத்தரவாத சான்றிதழ் ஆகிய எதுவும் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை.<br><br>அவ்வாறே நிர்மாணத்தின் போது பொறியியல் மதிப்பீட்டிற்குரிய 54 வேலை விடயங்கள் கைவிடப்பட்டிருந்ததுடன், அந்த கைவிடப்பட்ட விடயங்களின் மொத்த பெறுமதி ரூபா 5,673,089 ஆனது. அவ்வாறே ஒரு நாளைக்கு தாமதக் கட்டணம் ரூபா 7,650 குறைத்துக் காட்டி ஒப்பந்த பிரகாரம் அறவிட வேண்டிய, ரூபா 3,650,016 ஆன தாமத தண்டப்பணத்தை அறவிட்டிருக்காததுடன், பெறுகைகள் குழுவினால் 2021 திசெம்பர் 31 திகதி வரை கால நீடிப்பு செய்திருந்த போதும் கால நீடிப்பு செய்யும் போது வேலைத் திட்டமொன்றை சமர்பித்திருக்காததன் மீது போன்றே மாவட்ட பொறியியல் பிரிவினால் ஒப்பந்தம் தொடர்பாக எந்த சந்தர்ப்பத்திலும் முன்னேற்ற அறிக்கையை தயாரித்திருக்காததன் காரணமாக அந்த ஒப்பந்த காலத்தை நீடித்திருந்ததனை கணக்காய்வினால் ஏற்க முடியாதிருந்தது. | இந்த 54 வேலை விடயங்களினுள் “Provisional Sum” ஆக குறிப்பிட்டு சில வேலை உருப்படிகள் உள்ளதாக மற்றும் அவை பணிகளை அளவீட்டை பெற்று கொடுப்பனவை பின்னர் மேற்கொள்ள உள்ள உருப்படியாகும் என, ஒரு நாள் தாமதக் கட்டணம் ஒப்பந்த பெறுமதியில் .05% ஆக வேண்டியதுடன் தாமதத் தவறினால் அச்சதவீதம் .025% ஆக குறிப்பிடப்பட்டுள்ளதாக. இக்காலத்தில் நாட்டில் நிலவிய கொவிட் தொற்று நிலைமையின் முன்னிலையில் டென்டரை திறந்த திகதி முதல் ஆரம்பிக்க வழங்கிய திகதி வரையும் நிலவியது சீரற்ற காலமாகையால் சிற்சில தாமதங்கள் ஏற்பட்டதாக. | இவ் ஒப்பந்தத்தை மேற்கொள்வது தொடர்பாக சுயாதீன விசாரணை ஒன்றை நடாத்தி தேவையான நடவக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | பாலிந்தநுவர பிரதேச செயலக பிரிவில் நீதியாவல கிராம உத்தியோகத்தர் பிரிவில் மேற்கொண்டிருந்த கிதுள் அபிவிருத்தி மத்திய நிலைய கட்டித்தின் புனர்நிர்மாணத்திற்கான பொறியியல் மதிப்பீட்டை தயாரிக்கும் போது எந்த கட்டிட கட்டண அட்டவணையை அடிப்படையாகக் கொண்டதாக குறிப்பிடாததுடன் அந்தந்த உருப்படிக்காக தொடர்புபடுத்திக் கொண்ட அளவுகளை உறுதி செய்து கொள்ள தளத்தில் பெற்ற அளவுகளை | | |

| | | |
|---|---|---|
| உள்ளடக்கி அளவுத்பத்திரம் ஒன்றை அல்லது குறிப்பு பத்திரமொன்றை தயாரித்திருக்கவில்லை.<br><br>கட்டிட நவீனமயமாக்கலின் போது மேற்கொண்ட மேலதிக வேலைக்காக கொடுப்பனவு செய்வதற்கு குறித்த தரப்பினரின் எழுத்துமூல கோரிக்கை மற்றும் பொறுப்புவாய்ந்த தரப்பினரின் பரிந்துரையை பெற்றிருக்கவில்லை.<br><br>உடன்பட்ட காலஎல்லையினுள் வேலையை பூர்த்தி செய்ய ஒப்பந்ததாரரிடமிருந்து வேலைத் திட்டமொன்றை பெற்றிருக்காததுடன் பணிகளிற்குரிய வேலைத் திட்டமொன்றும் வழங்கப்பட்டிருக்கவில்லை.<br><br>கைத்தொழிலின் வேலைகளை பூர்த்தி செய்ததற்கான அறிக்கையொன்று, மாற்றுவதுடன் தொடர்பான ஒப்பந்ததாரரினால் வழங்கப்படும் திட்டம், வேலை பூர்த்தி செய்த பின்னர் வழங்கும் திட்டம், மின் உதிரிப்பாகங்கள் தொடர்பாக பட்டய மின்பொறியியல் அறிக்கையொன்று வொரன்டி மற்றும் கெரண்டி சான்றிதழ் மற்றும் ஒப்பந்ததாரரின் உத்தரவாத சான்றிதழ் ஆகிய எதுவும் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை.<br><br>கட்டிடத்தில் பொறுத்தியிருந்த 02 சிவிலிங் மின் விசிரிகளை இயக்க முடியுமானவாறு பொருத்தியிருக்காத போதும் அதற்காக ரூபா 34,240 செலுத்தியிருந்ததுடன் பொருத்தியிருந்த 05 கதவுகளை தாழ்வாரமிட்டு மூட முடியாத போதும் அதற்காக ரூபா 49,683 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | பதில் சமர்பிக்கப்படவில்லை | இந்த ஒப்பந்தத்தை மேற்கொள்வது தொடர்பாக சுயாதீன விசாரணை ஒன்றை நடாத்தி தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) சௌபாக்கிய உற்பத்தி கிராம நிகழ்ச்சித் திட்டம் - 2021 கீழ் 07 பிரதேச செயலகங்களில் நடைமுறைப்படுத்தி இருந்த செயற்திட்டங்கள் தொடர்பாக மேற்கொண்ட மாதிரி கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) பாலிந்தநுவர பிரதேச செயலக பிரிவில் சௌபாக்கிய உற்பத்தி கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கித்துல் உற்பத்தி விற்பனை மத்திய நிலையமொன்றை நிர்மாணிக்க ரூபா 2,932,679 உம் பயன்பெறுனர்களுக்கு கித்துல் உற்பத்தி சார்ந்த உபகரணங்களை வழங்க ரூபா 2,148,000 உமாக ரூபா 5,080,679 செலவில் செயற்படுத்தியிருந்த கித்துல் உற்பத்தி கிராம செயற்திட்டம் தொடர்பாக மேற்கொண்ட பௌதீக பரிசோதனையின் போது நிர்மாணித்து ஒராண்டு செல்ல முன்னர் | பதில் சமர்பிக்கப்படவில்லை | செயற் திட்டம் எதிர்பார்த்த நோக்கத்தை அடைந்து கொள்ளாமை தொடர்பாக பின்னூட்டல் செய்ய வேண்டியதுடன் பொறுப்புவாய்ந்தவர்களுக்கு எதிராக |

| | | |
|---|---|---|
| விற்பனை மத்திய நிலைய கட்டத்தின் பின்புறம் மற்றும் பக்க சுவர்களில் கனிசமான அளவு கோடுகள் மற்றும் வெடிப்புக்களை காணக்கூடியதாக இருந்ததுடன் இறுதி பட்டிலினூடாக கொன்கிரீட் கதிரை மற்றும் 02 தொகுதி மேசைகளிற்காக ரூபா 49,500 செலுத்தப்பட்டிருந்த போதும் பௌதீக பரிசோதனையின் போது ஒரு கொன்கிரீட் கதிரை மற்றும் ஒரு மேசைத் தொகுதி காணப்பட்டதால் ரூபா 24,750 பெறுமதியான ஒரு கொன்கிரீட் கதிரை மற்றும் ஒரு மேசைத் தொகுதியின் பற்றாக்குறையானது. | | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| இச் செயற்திட்டத்தின் கீழ் கித்துல் உற்பத்தி கைத்தொழிலில் ஈடுபடும் தெரிவு செய்யப்பட்ட 05 பயன்பெறுனர்களுக்கு கித்துல் உற்பத்தி கூடத்தை அமைக்க மூலப்பொருட்களை பெற்றுக் கொள்ள ஒருவருக்கு ரூபா 100,000 வீதம் ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் எஞ்சியதை பயன்பெறுனரின் பங்களிப்புடன் உற்பத்தி கூடத்தை அமைக்க வேண்டியதானது. மாதிரி பௌதீக பரிசோதனையின் போது, பயன்பெறுனர்களுக்கு சிமெந்து பைகள், புலொக் கல், எஸ்பெஸ்டஸ் தகரம், பளிங்கு கற்கள் மற்றும் 10 மில்லி மீற்றர் கம்பி வழங்கியதாக பண்டக பதிவேட்டில் உட்படுத்தி பயன்பெறுனர்களும் அவற்றை பெற்றுக் கொண்டதாக கையொப்பம் இட்டிருந்த போதும், குறித்த பண்டங்களை வழங்கியிருந்த கட்டிட பொருட்கள் விற்பனை நியையத்திலிருந்து பெற்றுக் கொண்டதாக கையொப்பமிட்டிருந்த அனைத்து பொருட்களும் பயன்பெறுனர்களுக்கு கிடைத்து இருக்காததுடன் சில பொருட்களிற்கு பதிலாக அவற்றின் பெறுமதிக்காக விற்பனை நிலையத்தால் பணமும் வழங்கப்பட்டிருந்தது. | பதில் சமர்பிக்கப்படவில்லை | செயற்திட்டம் எதிர்பார்த்த நோக்கத்தை அடைந்து கொள்ளாமை தொடர்பாக பின்னூட்டல் செய்ய வேண்டியதுடன் பொறுப்புவாய்ந்தவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| எவ்வாறாயினும் பௌதீக பரிசோதனையின் போது 03 பயன்பெறுனர்களால் உற்பத்தி கூட கட்டிட லின்டன் அளவு வரை சுவர் மாத்திரம் கட்டி கைவிடப்பட்டிருந்ததால் செயற்திட்டத்தின் எதிர்பார்த்த நோக்கம் அடையப்பெற்றிருக்கவில்லை. | பதில் சமர்பிக்கப்படவில்லை | செயற்திட்டம் எதிர்பார்த்த நோக்கத்தை அடைந்து கொள்ளாமை தொடர்பாக பின்னூட்டல் செய்ய வேண்டியதுடன் பொறுப்புவாய்ந்தவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும |

| | | | |
|---|---|---|---|
| (ii) | சௌபாக்கிய செயற்திட்டத்தின் கீழ் பேருவளை பிரதேச செயலகத்தினூடாக செயற்படுத்திய செயற்திட்டத்தின் கீழ் தமது விவசாய நிலங்களை பாதுகாத்துக் கொள்ள ஒரு பயன்பெறுனருக்கு 03 மீற்றர் உயர 50 மீற்றர் நீல விவசாய பாதுகாப்பு வலை உருளை 03 வீதம் 45 பயன்பெறுனர்களுக்கு வழங்கியிருந்த போதும் 2023 சனவரி 23 திகதி கணக்கய்விற்கு சமர்பித்திருந்த தகவல்களின் பிரகாரம் 05 விவசாயிகளினால் மாத்திரம் அந்த வலைகளை பயன்படுத்தி விவசாய நிலங்களை பாதுகாத்திருந்ததுடன் எஞ்சிய 40 விவசாயிகளும் தம்மால் பெற்றுக் கொண்ட விவசாய பாதுகாப்பு வலைகளை பயன்படுத்தி விவசாய நிலங்களை தயாரித்திருக்கவில்லை. அதன் பிரகாரம் ரூபா 3,060,000 பெறுமதியான வலைகள் தேவையான கால எல்லையிள் எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கைக்கும் பயன்படுத்தியிருக்காத காரணத்தால் செயற்திட்டத்தின் எதிர்பார்த்த விளைவு அடையப் பெற்றிருக்கவில்லை. | சௌபாக்கிய உற்பத்தி கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் விவசாய பாதுகாப்பு வலைகளை 45 பயன்பெறுனர்களுக்கு வெற்றிகரமாக வநியோகித்து முடித்துள்ளதுடன் பயன்படுத்தாத 09 பாதுகப்பு வலைகள் தொடர்பாக விசாரித்துப் பார்த்து எடுக்க முடியுமான நடவடிக்கைகள் தொடர்பாக குறித்த அலுவலர்கள் அறிவூட்டப்பட்டுள்ளதாக. | விவசாய பாதுகாப்பு வலைகளை குறித்த செயலிற்கு பயன்படுத்தாது தொடர்பாக பின்னூட்டல் செய்ய வேண்டியதுடன் அவற்றின் குறைப் பயன்பாடு தொடர்பாக பொறுப்புவாய்ந்த வர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | பானதுறை பிரதேச செயலகத்தினூடாக சௌபாக்கிய உற்பத்தி கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உயர் தரத்திமான உப்பிட்ட மீன் உற்பத்தி செயற்திட்டத்தை தெரிவு செய்திருந்ததுடன் நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்திய 03 பிரிவுகளிற்குரிய அப் பிரிவுப் பொறுப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் அறிக்கைகளிற்கு அமைய தற்போது மிகவும் சிறியளவில் மாத்திரம் உப்பிட்ட மீன் உற்பத்தி செய்யப்படுகிறது. தற்போது உப்பிட்ட மீன் பயன்பெறுனர்கள் முகம் கொடுத்துள்ள பல பிரச்சினைகளின் காரணமாக இச் செயற்திட்டம் எதிர்பார்த்த நோக்கத்தை அடைந்திருக்கவில்லை. உப்பிட்ட மீன் உற்பத்தி பீப்பாக்களை கொள்வனவு செய்வதற்கான பெறுகைகள் குழு அறிக்கை பிரகாரம் பலகை பீப்பாக்களை கொள்வனவு செய்ய தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு பரிந்துரைத்த போதும் அப் பரிந்துரையை கவனிக்காது மற்றும் பிலாஸ்டிக் பாத்திரங்களில் உப்பிட்ட மீன் உற்பத்தி செய்வது சுகாதார பாதுகாப்பற்றதாக குறித்த பிரிவு சுட்டிக்காட்டியுள்ள போதும் இச் செயற்திட்டத்திற்காக பயன்பெறுனர்களின் கோரிக்கையின் பெயரில் மாத்திரம் உணவு தரத்திலான பிலாஸ்டிக் பாத்திரங்களை வழங்குவதன் மூலம் "உயர் தரத்திமான உப்பிட்ட மீன் உற்பத்தி" இற்கான செயற் திட்டத்தின் எதிர்பார்த்த நோக்கம் அடையப் பெற்றிருக்காததுடன் 36 பயன்பெறுனர்களிற்கு இடையில் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த 108 | பதில் சமர்பிக்கப்படவில்லை | செயற் திட்டம் எதிர்பார்த்த நோக்கத்தை அடைந்து கொள்ளாமை தொடர்பாக பின்னூட்டல் செய்ய வேண்டியதுடன் பொறுப்புவாய்ந்த வர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிலாஸ்டிக் பாத்திரங்களை கொள்வனவு செய்ய செலவிட்ட 442,800 தொகை விளைவற்ற செலவாக இருந்தது. | | |
| (iv) | வலல்ளாவிட்ட பிரதேச செயலகத்தில் சௌபாக்கிய உற்பத்தி கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செயற்படுத்திய செயற் திட்டங்களில் ஒரு செயற் திட்டமான வெற்றிலை உற்பத்தி செயற் திட்டத்திற்காக மேற்கொண்ட மொத்த கிரயம் ரூபா 7,196,341 ஆனதுடன் அவற்றில் வெற்றிலை பயிர் செய்கைக்காக பயன்பெறும் விவசாயிகளுக்கு கிருமித் தடுப்பு வலை வழங்க மாத்திரம் ரூபா 3,643,669 தொகை செலுத்தப்பட்டிருந்த போதும் விவசாயிகளுக்கு கிருமித் தடுப்பு வலைக்கு பதிலாக வெற்றிலை உற்பத்தியின் கிருமித் தடுப்பிற்கு எவ்வித தொடர்பும் இல்லாத எல்லைகளை வேறாக்க வீடுகளில் மற்றும் பாடசாலைகளில் பயன்படுத்தும் வலை இதற்காக வழங்கப்பட்டிருந்தது. 2023 ஆண்டிற்குரிய கணக்காய்வு திகதியளவில் செயற் திட்டம் தொடர்பாக பெற்றுக் கொண்ட அறிக்கையின் பிரகாரம் 45 பயன் பெறுனர்கள் வெற்றிலை உற்பத்தியின் வெற்றிகரமான விளைவுகளை பெற்றிருக்காததுடன் அதன் பிரகாரம் ஒரு பயன்பெறுனரிற்காக ரூபா 80,858 வீதம் செலவிட்டிருந்த செயற் திட்டத்தில் மொத்த விளைவற்ற செலவு ரூபா 3,638,610 ஆனது. | பதில் சமர்பிக்கப்படவில்லை | செயற் திட்டம் எதிர்பார்த்த நோக்கத்தை அடைந்து கொள்ளாமை தொடர்பாக பின்னூட்டல் செய்ய வேண்டியதுடன் பொறுப்புவாய்ந்த வர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (v) | சௌபாக்கிய உற்பத்தி கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வலல்ளாவிட்ட பிரதேச செயலகத்தினூடாக செயற்படுத்தியிருந்த மற்றைய செயற்திட்டமான மன்டகள கருவா கிராமத்திற்காக கருவா பிழியும் மத்திய நிலையமொன்றை நிர்மாணிக்க ரூபா 3,424,311 தொகை செலவிட்டிருந்ததுடன் செயற்திட்ட உத்தேசத்தின் பிரகாரம் இந்த கருவா பிழியும் மத்திய நிலையத்திலிருந்து மாதாற்தம் கருவா இலையை பயன்படுத்தி 15 போத்தல் எண்ணெய் மற்றும் கருவா தோலைப் பயன்படுத்தி மாதாந்தம் 12 போத்தல் எண்ணெய் உற்பத்தி செய்ய எதிர்பார்த்த போதும் மத்திய நிலையத்தை ஆரமப்பித்து கணக்காய்வு திகதி வரையிலும் ஓராண்டு காலம் கடந்திருந்த போதும் அதன் முன்னேற்றம் இலையை பயன்படுத்தி 04 போத்தல் எண்ணெய் மற்றும் கருவா தோலைப் பயன்படுத்தி அரை போத்தல் எண்ணெய் மாத்திரம் ஆனதாக வெளிப்படுத்தப்பட்டது. இதன் பிரகாரம் மத்திய நிலைய எதிர்பார்த்த முன்னேற்றம் 01 சதவீதத்திற்கும் குறைவானதென அவதானிக்கப்பட்டதுடன் மத்திய நிலையத்தின் | பதில் சமர்பிக்கப்படவில்லை | செயற்திட்டம் எதிர்பார்த்த நோக்கத்தை அடைந்து கொள்ளாமை தொடர்பாக பின்னூட்டல் செய்ய வேண்டியதுடன் பொறுப்புவாய்ந்த வர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எஞ்சிய எதிர்பார்த்த முன்னேற்றத்தை வெற்றி பெறச் செய்ய எந்த அளவிலும் ஏற்கக்கூடிய வேலைத் திட்டமொன்றை அறிமுகப்படுத்தி இருக்கவில்லை. | | |
| (vi) | அகலவத்த பிரதேச செயலகத்தில் சௌபாக்கிய உற்பத்தி கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செயற்படுத்தியிருந்த ஒரு செயற்திட்டமான சந்தனக்கூரு உற்பத்தி செயற் திட்டத்திற்காக ரூபா 1,367,250 செலவிடப்பட்டிருந்ததுடன் செயற் திட்டத்தினால் எதிர்பார்த்த முன்னேற்றமாக ஒரு நாளைக்கு ஒரு பயன்பாட்டாளரினால் 8 கிலோ சந்தனக்கூரு உற்பத்தி இலக்காகக் கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மாதாந்தம் ஒரு பயன்பாட்டாளர் 224,000 சந்தனக்கூருகளை உற்பத்தி செய்ய வேண்டிய போதும் 2022 செப்டம்பர் 30 திகதியன்று சமர்பித்த முன்னேற்ற அறிக்கை பிரகாரம் ஓராண்டிற்கு கிட்டிய காலம் கடந்திருந்த போதும் அந்த உற்பத்தி இலக்கை எவரும் அடைந்திருக்கவில்லை. 2023 பெப்ரவரி 09 ஆம் திகதி கணக்காய்வினால் மெற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் பிரகாரம் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கை பிரகாரம் 30 பயன்பாட்டார்களின் 16 பேர்கள் அதாவது, 53 சதவீதம் சந்தனக்கூரு உற்பத்தி நடவடிக்கையை நிறுத்தி இருந்தனர். மூலப்பொருள் பெற்றக்கொள்வதன் கடினம், நோய்பிணி, சந்தையை தேடிக் கொள்வமன் சிரமம் மற்றும் உரிய தொடர்புபடுத்தலொன்று, இயக்குதலொன்று மற்றும் கட்டுப்பாடொன்று இல்லாமை உள்ளிட்ட காரணங்களினால் பயன்பாட்டாளர்களில் 50 சதவீதத்திற்கு அதிகாமானவர்கள் உற்பத்தியை நிறுத்தி இருந்ததன் மீது குறித்த செயற் திட்டம் தற்போது தோல்வியடைந்து இருந்ததுடன் தற்போது செயற்பாட்டு மட்டத்திலுள்ள பயன்பாட்டாளர்களினது6ம் முன்னேற்றம் எதிர்பார்த்தவாறு திருப்திகரமான மட்டத்தில் காணப்படவில்லை. | பதில் சமர்பிக்கப்படவில்லை | செயற் திட்டம் எதிர்பார்த்த நோக்கத்தை அடைந்து கொள்ளாமை தொடர்பாக பின்னூட்டல் செய்ய வேண்டியதுடன் பொறுப்புவாய்ந்த வர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (vii) | அகலவத்த பிரதேச செயலகத்தில் சௌபாக்கிய உற்பத்தி கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செயற்படுத்தியிருந்த இன்னுமொரு செயற்திட்டமான ஏற்றுமதிக்காக மரக்கறி உற்பத்தி செயற்திட்டத்திற்காக ரூபா 4,094,875 ஆன செலவின மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதும் செயற்திட்டத்திற்காக மேற்கொண்டிருந்த செலவு ரூபா 1,655,100 அளவாக இருந்தது. 20 பயன்பாட்டாளர்களிற்காக ஒரு பயன்பாட்டாளருக்கான கிரயம் ரூபா 64,800 ஆன விவசாய தடுப்பு வலை 03 உருளை | பதில் சமர்பிக்கப்படவில்லை | செயற் திட்டம் எதிர்பார்த்த நோக்கத்தை அடைந்து கொள்ளாமை தொடர்பாக பின்னூட்டல் செய்ய வேண்டியதுடன் பொறுப்புவாய்ந்த வர்களுக்கு எதிராக |

வீதம் மற்றும் கிரயம் ரூபா 17,955 ஆன மரக்கறி பொதியிடும் 02 கூடைகள் வீதம் வழங்குவதற்காக ஆனது.

கணக்காய்வு மாதிரி பரிசோதனைக்கு உட்பட்ட 04 பயன்பாட்டாளர்களும் தான் பெற்றுக் கொண்டிருந்த வலையை உரிய முறையில் நோக்கம் அடையப்பெறும் வகையில் பயன்படுத்தி இருக்காததுடன் வழங்கியிருந்த பொதியிடும் கூடைகளையும் பயன்படுத்தாது பாதுகாப்பாக வீட்டில் வைத்திருந்தனர். செயற்திட்ட அறிக்கையின் பிரகாரம் 44,000,000 ஆன வருடாந்த வருமானத்தை எதிர்பார்த்திருந்த போதிலும் 20 பயன்பாட்டாளர்களும் ஒரு போகத்தில் விற்பனையால் பெற்றிருந்த வருமானம் ரூபா 473,000 மாத்திரம் ஆனதுடன் செயற்திட்டத்தால் எதிர்பார்த்த உற்பத்தி 20 ஏக்கர் நில அளவில் ஏற்றுமதிக்காக பயதங்காய் மற்றும் வெள்ளரிக்காய் உற்பத்தியான போதும் குறித்த பயிர் நிலங்களில் மேற்கொண்ட பௌதீக பரிசோனையின் மற்றும் செயற்திட்ட முன்னேற்ற அறிக்கை பிரகாரம் வெள்ளரிக்காய் பயிர் செய்திருந்தது ஒரு பயன்பாட்டாளர் மாத்திரம் ஆன போதும் எதிர்பார்த்த வருடாந்த அறுவடை 600,000 கிலோ கிராம் வெள்ளரிக்காய்கள் ஆகும்.

அவ்வாறே செயற்திட்ட அறிக்கையினால் எதிர்பார்த்தவாறு இவ்வாறு பயிரிடும் மரக்கறி ஏற்றுமதிக்காக தயார்படுத்த 04 பிரிவுகளுக்காக 02 மத்திய நிலையங்களை நிர்மாணிக்கவும், விவசாய திணைக்களத்தின் விவசாய வியாபார பிரிவு மூலம் அறிமுகப்படுத்திய இரண்டு விற்பனை நிலையங்களை இஸ்தாபிக்கவும் திட்டமிட்டிருந்த போதும் அவ்வெந்த திட்டத்தினையும் செயற்படுத்தி இருக்கவில்லை.

அவ்வாறே பயிரிடலின் நிலையான உற்பத்தியை உருவாக்கிக் கொள்ள மாவட்ட விவசாய பணிப்பாளர், பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் மற்றும் கமநல சேவை உதவி ஆணையாளரின் உதவியை பெற்றுக் கொள்ள எதிர்பார்த்திருந்ததுடன் சர்வதேச சந்தையை உருவாக்குவதற்காக பேராதனை விவசாய திணைக்களத்தின் விவசாய வியாபார அபிவிருத்தி தகவல்கள் செவையின் உதவியை பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும் செயற்திட்டத்தை செயற்படுத்தும் போது மேலே எதிர்பார்த்த எவ்வித நிபுணததுவ உதவியையும் பெற்றுக் கொள்ள நடவடிக்ககை எடுத்திருக்காததுடன் செயற்திட்டத்தினால் எதிர்பார்த்திருந்த எவ்வித இலக்குகளையும் அடைந்திருக்கவிலலை.

நடவடிக்கை எடுக்க வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| (viii) | இங்கிரிய பிரதேச செயலகத்தில் சௌபாக்கிய உற்பத்தி கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செயற்படுத்தருந்த வியாபார அலங்கார மீன் வளர்ப்பு செயற்திட்டத்தை ஆரம்பிக்க 61 பயன்பாட்டாளர்களிற்காக ரூபா 6,100,000 ஆன நிதி வசதியை வழங்கியிருந்ததுடன் செயற்திட்ட அறிக்கை பிரகாரம் முதலாம் கட்டத்தின் கீழ் மீன் தாங்கிகளை தயாரித்துக் கொள்வதற்கான நிலத்தை தயார்படுத்திய பின்னர் ஊக்குவிப்பு தொகையின் 50 சதவீதத்தை செலுத்துதல் மற்றும் இரண்டாம் கட்டத்தின் கீழ் தாங்கி தயாரித்து முடிவடைந்தவுடன் மீன்களை இடும் போது எஞ்சிய 50,000 வீதம் பணம் விடுவிப்பதாக குறிப்பிட்டிருந்த போதும் பிரதேச செயலக திட்டமிடல் பிரிவினால் தயாரிக்கப்பட்ட பௌதீக முன்னேற்ற அறிக்கை பிரகாரம் 27 பயன்பாட்டாளர்களும் மீன் தாங்கிகளை தயாரித்திருந்த போதும் மீன்களை தாங்களில் இட்டு செயற்திட்டததை ஆரம்பிக்கும் மட்டத்திற்கு அத் தாங்கிகளை உருவாக்கியிருக்காததுடன் மீன்களும் இடப்பட்டிருக்கவில்லை.<br><br>அவ்வாறே அப் பயன்பாட்டாளர்களுக்கு உரிய தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யாது ரூபா 50,000 வீதம் ரூபா 1,350,000 செலுத்தியிருந்ததுடன் செயற்திட்டத்தில் குறிப்பிடப்படும் உரிய குறைந்தபட்ச தேவைப்பாடுகளையேனும் பூர்த்தி செய்யாது 02 பயன்பாட்டாளர்களுக்கு ஒருவருக்கு ரூபா 100,000 வீதம் ரூபா 200,000 செலுத்தப்பட்டிருந்தது. கணக்காய்வினால் குறித்த கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் மேற்கொண்ட மாதிரி பரிசோதனையின் போது மொத்த உதவித் தொகையை பெற்ற 17 பயன்பாட்டாளர்களும் குறித்த செயற்திட்டத்தை பூரணப்படுத்தாது மீன் தாங்கிகளை நிர்மாணிப்பதை பல மட்டத்தின் கீழ் கைவிட்டிருந்ததுடன் குறித்த பொறுப்புவாய்ந்த அலுவலர்கள் இது தொடர்பாக தமது கவனத்தை செலுத்தியிருக்கவில்லை. அதன் காரணமாக செயற்திட்டத்தின் எதிர்பார்த்த விளைவுகள் கிடைக்காது போனதில் செயற்திட்டத்தினூடாக நோக்கத்திலான இலக்குகளை அடைந்து கொள்ள முடியாதிருந்தது. | பதில் சமர்பிக்கப்படவில்லை | செயற் திட்டம் எதிர்பார்த்த நோக்கத்தை அடைந்து கொள்ளாமை தொடர்பாக பின்னூட்டல் செய்ய வேண்டியதுடன் பொறுப்புவாய்ந்த வர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ix) | களுத்துறை மாவட்ட செயலாளரின் சௌபாக்கிய உற்பத்தி கிராமம் - நிலையான தன்மையை பேணிக் கொள்வதற்கான வழிகாட்டியின் விடயம் 01(ii) இலக்கம் பிரகாரம் பயன்பாட்டாளர்களின் தனிப்பட்ட பாவனைக்கு வழங்கியுள்ள உபகரணங்களை குறித்த | பதில் சமர்பிக்கப்படவில்லை | செயற்திட்டங்களின் வெற்றிக்காக பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரின் தொடர்ச்சியான |

| | | |
|---|---|---|
| உற்பத்தி கைத்தொழிலிற்காகவே பயன்படுத்துவதா என மற்றும் அதனூடாக பயன்பாட்டாளர்களின் சீவனோபாய வழியை மேம்படுத்துவதா என பிரிவின் அபிவிருத்தி உத்தியோகத்தரின் தொடர்ச்சியான மேற்பார்வைக்கு உட்படுத்த வேண்டுமென குறிப்பிட்டிருந்த போதும் அவ்வாறான தொடர்ச்சியான மேற்பார்வையொன்று இடம்பெறுவதாக எழுத்துமூல சான்றுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்படவில்லை.<br>2021/01 சௌபாக்கிய உற்பத்தி கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் வழகாட்டி கோவையின் விடயம் 08 பிரகாரமும் செயற்திட்டத்தை செயற்படுத்துவதன் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு செயற்திட்டத்தை நிலையாக பேணிச் செல்லும் பொறுப்பு பிரிவுப் பொறுப்பு பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தரிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ள போதும் குறித்த பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர் இது தொடர்பாக தமது கவனத்தை செலுத்தி இருக்கவில்லை. அதன் காரணமாக சௌபாக்கிய செயற்திட்டங்களின் எதிர்பார்த்த விளைவுகள் கிடைக்காது போனதில் அவற்றினால் இலக்கு வைத்த நோக்கத்தை அடைந்து கொள்ள முடியாதிருந்தது. | | மேற்பார்வை மற்றும் பின்னூட்டல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.4 எதிர்பார்த்த வாறு பயன்படுத்தப்படாத செயற்திட்டங்கள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| தென்னை, கித்துல் மற்றும் பனை பயிர் செய்கையை மேம்படுத்தும் மற்றும் சார்ந்த தொழில்நுட்ப பொருட்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இரஜாங்க அமைச்சினால் களுத்துறை மாவட்ட செயலகத்திற்கு 2021 ஆண்டின் போது விடுவிக்கப்பட்டிருந்த ஏற்பாட்டின் கீழ் பாலிந்தநுவர பிரதேச செயலக பிரிவின் தீனியாவல கிராம உத்தியோகத்தர் பிரிவில் இடம்பெற்றிருந்த கித்துல் அபிவிருத்தி மத்திய நிலைய கட்டிடத்தின் மறுசீரமைப்பிதற்காக ரூபா 7,552,300 செலவிட்டு கட்டிடத்தை சுற்றி வேளி அடித்து உற்பிரவேச பாதை இண்டலொக் கற்களை பரத்தி 2021 ஆண்டு இறுதி அளவில் பூர்த்தி செய்திருந்த போதும் கணக்காய்வு திகதிய 2023 பெப்ரவரி 24 திகதி வரையும் கட்டிடத்தை எவ்வித | பதில் சமர்பிக்கப்படவில்லை | கணக்காய்வு திகதி வரையும் கட்டிடங்கள் மற்றும் உபகரணங்கள் விளைவற்று நிலவியமை தொடர்பாக பொறுப்புவாய்ந்தவர் களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாதிருப்பதாக அவதானிக்கப்பட்டதுடன் கட்டிடத்தை நடாத்திச் செல்லும் பொறுப்பு அல்லது மேற்பார்வை எவ்வித பொறுப்புவாய்ந்த தரப்பினருக்கு ஒப்படைத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.5 கணக்காய்வு ஐயவினாகளுக்கு பதில் வழங்கல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகத்திற்கு விநியோகிக்கப்பட்ட 23 கணக்காய்வு ஐயவினாகளுக்காக 2023 ஏப்ரில் 28 திகதி வரையும் பதில் வழங்கப்படவில்லை. | பிரதேச செயலகங்களில் மற்றும் உரிய பிரிவுகளிலிருந்து தெளிவுகளை பெற்றுக் கொள்ளும் தாமதம் காணப்படுவதுடன் குறித்த தெளிவுபடுத்தல் கிடைத்த பின்னர் விரைவில் அதற்காக பதில் வழங்கப்படுவதாக. | கணக்காய்வு ஐயவினாகளுக்கு காலரீதியாக பதில் வழங்கி உரிய சரிசெய்தல்கள் செய்யப்பட வேண்டும். |

### 3.6 முகாமைத்தவ பழவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | களுத்துறை மாவட்டத்தில் இயற்கை அனர்த்தங்களால் பூரண பாதிப்புக்குள்ளாகும் மற்றும் தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி அமைப்பினால் அதிக ஆபத்தின் காரணமாக அகற்ற வேண்டுமென புலத்சிங்ஹள பிரதேச செயலக பிரிவில் இனங்கண்ட குடும்பங்களிற்கு ‘‘வீட்டுக்கு வீடு’’ என்ற தொனிப்பொருளின் கீழ் புதிய வீடொன்றுடன் காணியொன்றை கொள்வனவு செய்வதன் கீழ் நலன்களை வழங்க தெரிவு செய்யப்பட்டிருந்த 80 குடும்பங்களில் 2023 சனவரி 01 திகதியளவில் 39 நபர்களிற்காக வீடு மற்றும் காணி விற்பனையாளர்களுக்கு புலத்சிங்ஹள பிரதேச செயலகத்தால் உச்ச மட்டம் ரூபா 1,600,000 எல்லையின் கீழ் ரூபா 54,250,000 செலுத்தியிருந்த போதும் அவ்வாறு பணம் செலுத்திய தெரிவு செய்யப்பட்ட பயன்பாட்டாளர்களின் பெரிற்கு கொள்வனவு | பதில் சமர்பிக்கப்படவில்லை | பயன்பாட்டாளர்களுக்கு விடுவித்த பணம் குறித்த விடயத்திற்கு பயன்படுத்தியதற்கான உறுதிப்படுத்தலை தாமதமின்றி பெற்றுக்கொள்ள வேண்டியதுடன் அவ்வாறு மேற்கொள்ளாத பயன்பாட்டாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்ட காணி மற்றும் வீட்டின் உரிமையை சுவீகரித்து அல்லது சுவீகரித்தமையை உறுதி செய்து கொண்டிருக்கவில்லை. மேலும் மேலே செயற்திட்டத்தின் கீழ் காணியை மாத்திரம் கொள்வனவு செய்ய ரூபா 400,000 வீதம் நலன் தொகையை வழங்கிய 05 பயன்பாட்டாளர்களால் கணக்காய்வு திகதியான 2023 மார்ச் 31 திகதியளவிலும் வீடமைக்க ஆரம்பித்திருக்காததுடன் அரச காணியொன்றில் வீடமைக்க காணி வழங்கப்பட்ட 04 பயன்பாட்டாளர்களினால் கணக்காய்வு திகதி வரையும் வீடமைக்க ஆரம்பித்திருக்கவில்லை. | | |
| (ஆ) | இங்கிரிய பிரதேச செயலகத்தில் இனங்கண்ட குடும்பங்களிற்கு ‘‘வீட்டுக்கு வீடு’’ என்ற தொனிப்பொருளின் கீழ் பயன்பாட்டாளர்களுக்கு அரசினால் வழங்கப்பட்ட காணியொன்றில் வீடொன்றை நிர்மாணிக்க ரூபா 1,200,000 வழங்கும் முறைமையூடாக 02 பயன்பாட்டாளர்களினால் அரசினால் வழங்கிய காணியை மற்றும் ரூபா 200,000 வீதமான ஆரம்ப தவணையை பெற்றிருந்த போதும் கணக்காய்வு திகதிய 2023 மார்ச் 20 திகதி வரையும் தமது வீட்டை நிர்மாணிக்கும் செயற்பாட்டை ஆரம்பித்தேனும் இருக்காததுடன் அம் முறைமையின் கீழ் தவணைப் பணம் பெற்ற 03 பயன்பாட்டாளர்கள் வீடமைக்கும் செயற்பாட்டை பூரணமாக முடித்திருக்கவில்லை. இரண்டாம் தவணை பணமும் விடுவிக்கப்பட்டிருந்த போதும் உரிய மட்டத்திற்கு நிர்மாண பணிகளை மேற்கொள்ளாத ஒரு பயன்பாட்டாளருக்கு மூன்றாம் தவணை பணம் ரூபா 100,000 தொகை விடுவிக்கப்பட்டிருந்த போதும் பயன்பாட்டாளர்களால் 2023 மார்ச் 20 திகதி வரையும் நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்திருக்கவில்லை. பயன்பாட்டாளர் கொள்வனவு செய்த காணிக்கு ரூபா 400,000 மற்றும் காணியில் வீடமைக்க ரூபா 1,200,000 வழங்குவதன் கீழ் மூன்றாம் தவணையை 2019 திசெம்பர் 31 திகதி பெற்ற ஒரு பயன்பாட்டாளர் 2023 மார்ச் 20 திகதி வரையும் வீடமைப்பதனை முற்றாக பூர்த்தி செய்திருக்காததுடன் இது தொடர்பான மேற்பார்வை பலவீனமான மட்டத்தில் நிலவின. | பதில் சமர்பிக்கப்படவில்லை | பயன்பாட்டாளர்களுக்கு விடுவித்த பணம் குறித்த விடயத்திற்கு பயன்படுத்துவதாக உறுதிப்படுத்திக் கொள்ள போதிய பின்னூட்டல் செய்ய வேண்டியதுடன் பின்னூட்டல் செய்யாது இரண்டாம் தவணை நிர்மாணத்தை மேற்கொள்ளாத பயன்பாட்டாளர்களுக்கு 03 ஆம் தவணையை செலுத்திய அலுவலர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | துப்பாக்கி அனுமதிப்பத்திரங்களை புதுப்பிக்கும் போது சம்பந்தப்பட்ட தரப்பினரிற்கு துப்பாக்கிகள் தொடர்ந்தும் அவசியம் என்பதை உத்தியோகத்தர்கள் உறுதி செய்ததற்கான எந்த சான்றுகளும் சமர்பிக்கப்படாததுடன் தகுதியற்ற நபர்களின் கைகளில் துப்பாக்கிகள் காணப்படுவதால் வனவிலங்குகள் மற்றும் பொதுமக்களின் உயிருக்குக் கடுமையான அச்சுறுத்தலை ஏற்படக்கூடும் என்பதால் துப்பாக்கிகளைப் பொறுப்பற்ற விடயங்களுக்கு பயன்படுத்துவதைத் தவிர்க்கவும் குறித்த காலப்பகுதிக்குள் துப்பாக்கி அனுமதிப் பத்திரத்தை புதுப்பிக்காத உரிமையாளர்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுப்பது மாவட்ட செயலாளர் மற்றும் பிரதேச பொலிஸ் அத்தியட்சர்களின் பொறுப்பாக இருந்த போதும் அந் நிறுவனங்களுக்கிடையில் முறையான ஒருங்கிணைப்பை பேணி அதேவேளை புதுப்பிக்கப்படாத துப்பாக்கிகளுக்கு போதிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது பானதுறை மற்றும் ஹொரன பிரதேச செயலகங்களில் நடத்தப்பட்ட மாதிரி பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | பதில் சமர்பிக்கப்படவில்லை | நிறுவனங்களிற்கு இடையில் முறையான ஒருங்கிணைப்பை பேணி அனுமதிப் பத்திரத்தை புதுப்பிக்காத துப்பாகிகளுக்கு போதிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | மீளர்யவாண்டில் ஓய்வூதியம் செலுத்துவது தொடர்பாக 04 பிரதேச செயலகப் பிரிவுகளில் மேற்கொண்ட மாதிரி கணக்காய்வு பரிசோதனையின் போது 03 பிரதேச செயலகங்களிலுமே 53 தற்காலிக கோவைகளின் மீது ரூபா 15,104,023 தொகை ஓய்வூதியமாக செலுத்தப்பட்டிருந்தது. இதன்படி காணாமல் போன கோவைகள் எப்போது காணமல் போனது, எந்த அலுவலரின் பொறுப்பில் இருக்கும் போது என்பது போன்ற மற்றும் அவை காணாமல் போனதற்கான காரணத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்காததுடன் பேணிச் செல்லப்படும் ஓய்வூதியம் செலுத்தும் பிரிவின் ஓய்வூதிய கோவைகள், மரணித்தல் அல்லது வேறு காரணங்களால் மாற்றமடையும் கோவைகள், புதிதாக சேர்க்கப்படும் கோவைகள் போன்றவற்றிற்குரிய தகவல்களை ஓய்வூதியம் | காணாமல் போன ஓய்வூதிய கோவைகளுக்காக தற்காலிக ஓய்வூதிய கோவைகள் தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்திற்காக ஓய்வூதிய திணைக்களத்திற்கு அனுப்பப்படுவதுடன் அலுவலர்களின் இடமாற்றம் இடம்பெறும் சந்தர்ப்பத்தில் ஒழுங்காக அவர்களின் பொறுப்பில் உள்ள கோவைகளை | ஓய்வூதிய கோவைகள் மற்றும் பதிவேடுகளை பராமரிப்பது தொடர்பாக போதிய தொழிற்துறைசார் கவனத்துடன் செயற்பட வேண்டும். தற்காலிக கோவைகள் மீது செலுத்திய ரூபா 15,104,023 இற்குரிய நிரந்தர ஆவணங்களை மீண்டும் ஒழுங்குபடுத்தி கோவையை மீண்டும் தயாரிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பான பதிவேட்டில் உட்படுத்தி அக்கோவைகளை ஓய்வூதிய அலுவலர்களுக்கு கையளித்தல் மற்றும் அலுவலர்கள் ஓய்வுபெறல் அல்லது இடமாறிச் செல்லும் சந்தர்ப்பங்களில் அலுவலரின் பொறுப்பில் உள்ள கோவைகளை முறையாக கையளிப்பு மற்றும் ஏற்றல் எச்சந்தர்பத்தலும் இடம்பெற்றிருக்கவில்லை. இதன் காரணமாக கோவைகள் காணாமல் போதல், போதிய ஆவணங்களை கோவைப்படுத்தாமை, தொடர்பாக பொறுப்புவாய்ந்த அலுவலர்கள் யார் என்பதை உறுதி செய்ய ஒழுங்கான முறைமையொன்று இஸ்தாபிக்கப்பட்டு இருக்காததால் ஓய்வூதிய கோவைகள் மற்றும் பதிவேடுகளை பராமரிப்பது தொடர்பாக போதிய தொழிற்துறைசார் கவனத்துடன் செயற்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | ஆவணப்படுத்தி கையளிக்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக. | |
| (உ) | களுத்துறை மாவட்டத்திலுள்ள 03 பிரதேச செயலகங்களில் 47 ஓய்வூதியக் கோப்புகளில் கணக்கீட்டு தவறு மற்றும் ஏனைய விடயங்களின் மீது 2022 திசெம்பர் 31 ஆம் திகதியன்று மேலதிகமாகச் செலுத்தப்பட்ட ஓய்வூதியத் தொகை ரூபா 5,327,820 ஆக இருந்ததுடன் அத்தொகை தவணைகளாக அறவிடப்பட்டு வருகின்றது. அவற்றில் 02 பிரதேச செயலகங்களில் 05 ஓய்வூதியம் பெறுவோர் மரணித்ததன் காரணமாக ரூபா 330,835 தொகை அறவிடப்படாமல் காணப்படுவதாகவும் அவதானிக்கப்பட்டது. | மரணித்த ஓய்வூதியம் பெறுவோர்களிடமிருந்து அறவிட முடியாது காணப்படும் ஓய்வூதிய மேலதிக செலுத்துதல் தொடர்பாக நி.பி 104 அறிக்கையிடன் இழப்பு நட்ட பதிவேட்டிற்கு அறிக்கையிட எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக. | மேலதிகமாகச் செலுத்திய ஓய்வூதிய தொகையை தாமதமின்றி அறவிட வேண்டியதுடன் மேலதிக செலுத்தலிற்கு பொறுப்புவாய்ந்தவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | திறைசேரி செயலாளரின் 2021 செப்டம்பர் 29 திகதிய PED/PMID/Cir/2021/01 இலக்க சுற்றறிக்கையின் 2.1 பந்தி பிரகாரம் பிரதேச செயலாளரினால் பெயரிடப்படும் இரண்டு பிரதிநிதிகளுடன் கூடிய மூவரைக் கொண்ட குழுவொன்றினால் மேற்குறித்த சுற்றறிக்கையின் இலக்கம் 2.3 கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பரீட்சித்து உறுதி செய்த பின்னர் சமுதாய அடிப்படை சங்கங்களிற்கு நிர்மாண வேலை ஒப்பந்தங்களை ஒப்படைக்க முடியுமானதுடன் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் பணிப்பாளர் நாயகத்தின் 2022 நவம்பர் 29 திகதிய இலக்கம் 06 கொண்ட சுற்றறிக்கை பிரகாரம் மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களினூடாக பதிவுசெய்யப்பட்ட சமூக சேவை அமைப்புகள் / அரச சார்பற்ற அமைப்புக்களிலிருந்து சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை வருடாந்தம் பெற்று அமைப்புக்களின் ஆரம்ப கோவையை நாளாதுவரையாக்க வேண்டிய போதும், | இச்சமூக சங்கம் தொடர்ச்சியான மக்கள் அமைப்பொன்று என குறித்த கிராம உத்தியோகத்தர் பிரிவின் அபிவிருத்தி உத்தியோகத்தரினூடாக உறுதி செய்துள்ளதுடன் குறித்த சங்கத்தின் அலுவளர் சபை தொடர்பாக சமூக சேவை அலுவலரினால் எழுத்து மூலம் அறிக்கையிட்டு செயற் திட்டததை செயற்படுத்த சங்கத்தின் பெயரில் | சுற்றறிக்கை பிரகாரம் சமுதாய அடிப்படை அமைப்பு தொடர்பாக தகவல்களை காலரீதியாக நாளாதுவரையாக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| பானதுறை பிரதேச செயலகத்தினால் அத்தகவல்களை நாளாதுவரையாக்காது, உடன்படிக்கை செய்யப்படும் சந்தர்ப்பத்தில் குறித்த சங்கம் தொடர்ச்சியானதா தொடர்ச்சியற்றதா என உறுதி செய்து கொள்ளாது 2022 ஆண்டின் 06 ஒப்பந்தங்ளுக்காக 05 சுயச்சை சங்கங்களுடன் உடன்பட்டு மேற்கொண்ட வேலைகளுக்காக ரூபா 3,721,039 செலுத்தப்பட்டியிருந்தது. | பேணிச் செல்லப்படும் வங்கிக் கணக்கு கூற்றின் பிரதியொன்றை பெற்றுள்ளதாக. | |

## 4 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துக்கொள்ளள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| களுத்துறை மாவட்ட செயலகத்தினால் 2030 நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் 17 நோக்கங்களின் கீழ் அபிவிருத்தி செயற்பாடுகளை இனங்கண்டிருந்த போதும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் பிரகாரம் மீளாய்வாண்டின் போது நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் இலக்கம 01 மற்றும் இலக்கம் 02 இற்காக முறையே அதாவது அனைத்து இடங்களிலும் காணப்படும் ஒவ்வொரு வகையான வருமையை ஒழிப்பது மற்றும் நல்ல போசாக்கு நிலைமைகளை வென்று நிலைபேறான விவசாயத்தை மேம்படுத்துவத்தின் கீழ் உளர் உணவு பொதி மற்றும் இந்தியன் நிவாரணத்தின் கீழ் அரிசி மற்றும் பால்மா விநியோகித்தலை மேற்கொண்டதாக குறிப்பிட்டிருந்த போதும் அந்நிகழ்ச்சித் திட்டம் கொவிட் தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கை முழுவதும் செயற்படுத்தப்பட்ட தேசிய நிகழ்ச்சித் திட்டமொன்றானது. நிலைபேறான அபிவிருத்தி திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 17 நோக்கங்களில் இலக்கம் 01, 02 மற்றும் 06 நோக்கங்களிற்கான மேற் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளை தவிர ஏனைய நோக்கங்களை அடைந்து கொள்ள 2022 ஆண்டின் போது அபிவிருத்தி செயற்பாடுகள் மேற்கொண்டதாக கணக்காய்விற்கு சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2022 ஆண்டில் நிதி அமைச்சின் மூலம் வெளியிடப்பட்ட BD/CBP/01/01/04-2022 இலக்கம் கொண்ட 2022 ஏப்ரில் 26 திகதிய சுற்றறிக்கை பிரகாரம் அனைத்து செயற் திட்டங்களையும் நிறுத்துமாறு அறிவித்திருந்ததால் பெறும்பாலான செயற் திட்டங்கள் செயற்படவில்லையென மற்றும் அதனால் நிலைபேறான இலக்குகளை அடைந்து கொள்ள முடியாமலிந்ததாக. | நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் நோக்கங்களை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

5. **பொது மக்களுக்கான சேவைகளை நிறைவேற்றல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பொது மக்கள் கூடுதலாக வருகைதரும் நிறுவகங்களில் கூடுதலான கேள்வியுள்ள சேவைக்காக செயலாற்றுகை குறிகாட்டியை இனங்காண்பது மற்றும் அவை மேற்கொள்ளப்படும் அளவை அளவிடுவதற்காக இலக்கு வைக்கப்பட்ட செவைகள் மற்றும் இலக்குகளை அமைச்சிற்கு சமர்ப்பிப்பது தொடர்பாக கணக்காய்விற்கு ஏற்றுக்கொள்ள முடியுமான போதிய தகவல்கள் மதிப்பிடக் கூடியவாறு உரிய காலப்பகுதியினுள் சமர்ப்பிக்கப்படாததுடன், அந்த இலக்குகளுக்கு அமைச்சின் அங்கீகாரம் கிடைத்ததா எனவும் உறுதியாகவில்லை. பிரதேச செயலத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட காலாண்டு முன்னேற்றம் மற்றும் ஆண்டு இறுதியில் சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்றம் ஒன்றிற்கொன்று வித்தியாசமாதல், ஏதேனும் சேவையொன்றில் இலக்கை சமர்ப்பிக்கும் போது அவை எண்ணிக்கை ரீதியாக சமர்ப்பிக்கப்பட வேண்டுமென பிரதெச செயலகத்திற்கு திட்டவட்டமாக குறிப்பிட்டிருகாதமை மற்றும் இயல்பான குறிகாட்டிகளை இனங்காணாமை போன்ற காரணங்கள் மீது மாவட்ட செயலகத்தின் 2022 ஆண்டிற்கான செயலாற்றுகை குறிகாட்டியை இனங்காணுதல், இலக்குகளை அமைத்தல் மற்றும் அடைந்து கொள்ளல் மற்றும் அவற்றின் முன்னேற்றத்தை அறிக்கையிடல், அளவிடல், மதிப்பிடல் மற்றும் இடப்பெயர்ச்சி தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் எதிர்பார்த்த அலவில் மேற்கொள்ளப்படவில்லை என கணக்காய்வினால் அவதான்க்கப்பட்டது. | 2022 ஆண்டில நான்கு காலாண்டுகளிற்குமாக களுத்துறை மாவட்டத்திற்குரிய அனைத்து பிரதேச செயலங்களினதும் இலக்குளை பெற்றுக் கொண்டு, ஒவ்வொறு காலாண்டு முடிவிலும் முன்னேற்றத்தை அறிக்கையிட்டுக் கொள்வதுடன் அதன் பிரகாரம் 2022 ஆண்டின் இலக்குகளில் முன்னேற்றத்தை அறிக்கையிட்டுள்ளதாக. | பொது மக்களுக்கு கூடுதலான சேவைகளை நிறைவேற்றக்கூடிய சரியான செயலாற்றல் குறிகாட்டிகளை இனங்காண வேண்டியதுடன் அங்கீகரிக்கப்பட்ட இலக்குகள் மற்றும் முன்னேற்றம் தொடர்பான போதிய தகவல்களை மதிப்பிடக் கூடியவாறு உரிய கால எல்லையினுள் சமர்பிக்க வேண்டுமென. |

## 6. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| | ---------------------------------------------- | ------------------------------------ | ---------------------- |
| (அ) | 2018 சனவரி 24 ஆம் திகதி 02/2018 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 02 ஆம் பின்னிணைப்பு படிவம் பிரகாரம் 2022 ஆண்டிற்காக மாவட்ட செயலகத்திற்காக தயாரிக்கப்பட்ட மனிதவளத் திட்டம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 2022 ஆண்டிற்காக பயிற்ச்சி திட்டமொன்று தயாரிக்கப்ட்டிருந்த போதும் அதனை 2/2018 சுற்றறிக்கை பிரகாரம் தயாரிக்கப்படவில்லையென மற்றும் 2023 ஆண்டிற்காக மனிதவள அபிவிருத்தி திட்டத்தை 2/2018 சுற்றறிக்கை பிரகாரம் தயாரித்துள்ளதாக. | சுற்றறிக்கை பிரகாரம் மனிதவள திட்டத்தை தயாரித்து கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும். |
| (ஆ) | இணைந்த சேவையின் உத்தியோகத்தர்களுக்காக வருடாந்த இடமாற்றக் கொள்கையின் 2.2.2 இன் பிரகாரம் ஒரே சேவை நிலையத்தில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்தை பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள் இடமாற்றத்திற்கு உட்படுவதாக குறிப்பிட்டிருந்த போதும் மாவட்ட செயலகத்தின் மற்றும் மாதிரி பரிசோதனைக்கு உள்ளான ஐந்து பிரதேச செயலகங்களில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேவைக்காலம் 05 ஆண்டுகளை மிகைத்த 256 உத்தியோகத்தர்கள் சேவை புரிவதாக கணக்காய்வினால் அவதானிக்கப்பட்டது. | 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் ஒரே சேவை நிலையத்தில் கடமையில் ஈடுபட்டுள்ள இணைந்த சேவையின் அனைத்து உத்தியோகத்தர்கள் தொடர்பாக முழுமையான தகவல்கள் வருடாந்தம் இணைந்த சேவை பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்படுவதாக மற்றும் திணைக்கள வருடாந்த இடமாற்ற சபையினால் ஆகக்கூடிய சேவை காலமொன்றுடன்கூடிய அலுவலர்களை இடமாற்றம் செய்ய முடியுமான எல்லா சந்தர்ப்பங்களிலும் நடவடிக்கை எடுப்பதாக. | இடமாற்ற கொள்கையின் பிரகாரம் வருடாந்தம் இடமாற்றம் மேற்கொள்ளப்பட வேண்டும். |